1974 மார்ச் 19]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, இதிலே 3-ல் இரண்டு பங்கு ஆந்திர மாநிலத்தில் இருக்கிறது. ஒரு பங்கு செங்கற்பட்டு மாவட்டம் பழவேற்காட்டில் இருக்கிறது. குறிப்பாக இந்தத் திட்டம் செயல்படுவது என்பது அந்த ஏரியில் இல்லை. அந்த ஏரியிலிருந்து தண்ணீர் கடலில் போய் விழுகிற கயவாய்ப் பகுதியில்தான் இந்தத் திட்டத்தை செயல்படுத்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் தான் எரால் குஞ்சுகளை செயற்கை முறையில் வளர்க்கலாம் என்று ஆராய்ச்சி மூலம் அறிவித்து இருக்கிறார்கள். இந்த இடத்தில் மடவை மீன்களையும் வளர்க்கலாம் என்றும் கூறுகிறார்கள். ஆகவே, மடவை, எரால் மீன்களை அங்கே வளர்த்து, நமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கத்தோடு மத்திய அரசாங்கமும் இதற்கு ஒப்புதல் தந்து இருக்கிறது. ஆந்திர அரசோடு சேர்ந்து ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் இந்தத் திட்டத்தை நிறை வேற்ற அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

ஆரம்பாக்கத்தில் பனிக்கட்டி தொழிற்சாலை

*498 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கத்தில் மீன் குளிர் பதன நிலையம் (Ice Plant) நிறுவுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

(இ) இவ்வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 1971, ஆகஸ்டில் செங்கற்பட்டு மாவட்டம் ஆரம்பாக்கத்தில் ஒரு டன் கொள்ளளவு கொண்ட குளிர் சேமிப்புச் சாதனத்துடன் கூடிய இரண்டு டன் பனிக்கட்டி தயாரிப்புச் சாலை ஒன்றை நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பனிக்கட்டி தயாரிப்புக்கான இயந்திரங்களை வழங்கி நிறுவுவதற்குரிய ஒப்பந்தப் புள்ளி களை ஏற்பது, கட்டிடங்கள் கட்டுதல், துணைக்கிணறு தோண்டுதல் ஆகியவை தொடர்பான வரைபடங்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் ஒப்புதல் வழங்குதல் ஆகியவை அரசின் தீவிர ஆய்விலுள்ளன.

(இ) இச்சாதனம் இயன்ற விரைவில் நிறுவப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: இதுவும் ஆந்திர எல்லையில் இருந்து ஏறக்குறைய 4 மைல் தூரத்தில் தான் இருக்கிறது. அங்கே பிடிக்கப் படுகின்ற மீன்கள் எல்லாம் குளிர் சேமிப்பு சாதனம் இல்லாததால் கெட்டுப்போய் விடுகின்றன. இதனால் மீனவர்கள் பெரிதும் சிரமப் படுகிறார்கள். இந்தத் திட்டம் 1971-ம் ஆண்டிலேயே துவங்கப்பட்ட திட்டம். ஆகவே, விரைவிலே இந்த ஆண்டு இறுதிக்குள்ளாவது இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மொத்தத்தில் ரூ. 73,140க்காக ஒரு செயற்குறிப்பை இயக்குநர் அவர்கள் அரசுக்கு அளித்திருக்கிறார்கள். நிதி இலாகா அதிலே குறிப்பாக பணியாளர்களுக்கு கட்டடம் கட்டுவது, விசை ஏற்றத்துக்கான அறை, துளைக் கிணறு அமைப்பது, எம். எஸ். தொட்டி கட்டுவது ஆகியவைகளையெல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அது இல்லாமல் இந்த நிலையத்தை அங்கே வைப்பது சாத்தியமாக இல்லை. எனவே அதை மீண்டும் நிதி இலாகாவிற்கு இந்தத் துறை இந்தக் கோரிக்கையை அனுப்பியிருக்கிறது. அது நிதி இலாகாவின் பரிசீலனையில் இருக்கிறது.

மாயூரம்-மணல்மேடு சாலை

*499 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-மணல்மேடு நெடுஞ்சாலையினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு ப. உ. சண்முகம் : இல்லை.

மாயூரத்திலுள்ள ஆற்றுப்புறம்போக்கு நிலங்கள்

*500 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஆற்றுப் புறம் போக்குகளில் ஆக்கிரமித்திருப்போரை அப்புறப்படுத்த அரசு மேற் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஆற்றுப் புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்திருப்போரை அகற்றுவதற்காக மாயூரம் கிளை பிரிவின் உதவிப் பொறியாளர் ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீசுகள் கொடுத்து ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார். அத்துடன் அவர்களிடமிருந்து அபராதத் தொகைகளை வசூலிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

Reservation of production of sarees for Handlooms

*501 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government have received any communication from the Centre during 1973 on the enforcement of the ban on production of coloured cotton sarees by Powerlooms; and

(*b*) if so, the details of the same?